# இந்துக்களின் வாழ்வியலில் அறம் : கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது.

கிஷாந்தினி திருச்செல்வம்
விடுகை வருடம், இந்துநாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kishanthiny.t@gmail.com
0772756895.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்துக்களின் உலகியல் வாழ்வு இல்லறம்இ துறவறம் எனும் பகுப்பு முறையில் அமைந்திருத்தலானது மனிதனது வாழ்வு முழுவதும் அறத்திலே தான் தங்கியிருக்கிறது என்பதை வற்புறுத்துவதாகக் கொள்ளலாம். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் எனக் கூறப்படுகிறது. மனித நடத்தைஇ குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் வழக்கமாகக் கொள்ளும் முடிவையே ஒழுக்கமாகக் கொண்டனர். இதனால் தனிமனித நடத்தை பெரும்பாலோரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கம் எனும் பண்பாக மலர்ந்துஇ வாழ்க்கை நெறியாக மாண்புற்றது. இதுவேஇ இந்துக்களின் வாழ்வின் அறமாயிற்று. இந்து அறமானதுஇ இந்து இலக்கியங்கள் பலவற்றிலும் எடுத்துரைப்புச் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் கி.பி 12ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியரால் எழுதப்பெற்ற தமிழ்க்காவியம் கந்தபுராணம்இ நல்ல பல வாழ்வியல் நெறிகளை- அறக்கருத்துக்களை விரித்துரைக்கின்ற தன்மை சிறப்பாகும். "கந்த புராணத்தில் இல்லாதது வேறு எந்தப் புராணத்திலும் இல்லை" என்பார்கள். இந்நிலையில்இ இந்து வாழ்வியல் நெறிகளைஇ "இந்துக்களின் வாழ்வியலில் அறம் - கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது" எனும் தலைப்பிலான கட்டுரையினூடாக வெளிப்படுத்தப்படுகிறது. விவரண ஆய்வு முறையினைப் பயன்படுத்தி இவ்வாய்வுக் கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்இ கந்தபுராணத்தில் காணப்படும் அறக்கருத்துக்கள் இந்துக்களின் வாழ்வியலைச் செம்மைப்படுத்தவல்லன என்பதை வெளிப்படுத்துவதாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : அறம்இ கந்தபுராணம்இ இந்துக்கள்இ வாழ்வுஇ சமுதாயம்

## அறிமுகம்

கி.பி 12 ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியரால் எழுதப்பட்ட தமிழ்க் காவியம் கந்தபுராணமாகும். பதினெண் புராணங்களும் வடமொழியில் இருப்பவை. இவற்றுள் ஸ்கந்த புராணத்தின் சங்கர சம்கிதையில் சிவரகசிய காண்டத்தில் வரும் முதல் ஆறு காண்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்பே கந்தபுராணமாகும். உற்பத்திக் காண்டம்இ அசுர காண்டம்இ மகேந்திர காண்டம்இ யுத்த காண்டம்இ தேவ காண்டம்இ தட்ச காண்டம் என்று ஆறு காண்டங்களை உடையது. இது 132 படலங்களையும் 10345 பாடல்களையும் உடையது. (இந்துக்கலைக்களஞ்சியம் தொகுதி 03). இருப்பினும் இந்நூலின் காலம் திட்டவட்டமாக நிறுவப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாணிக்கவாசகர்இ கம்பர் முதலானவர்களோடு ஒப்பிட்டு கி.பி 07 – 17 வரை பல்வேறு காலங்களை ஆய்வாளர்கள் ஊகித்துள்ளனர். இவற்றின் வன்மைஇ மென்மைகளைச் சீர் தூக்கி நா.சுப்பிரமணியன் என்பவர் கி.பி 13 - 15 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாக இருக்கலாம் எனும் முடிவுக்கு வருகின்றார்.[01]

இந்நூல் சொற்பொருட் சுவையும் பக்திச் சுவையும் மிக்கதாக இருப்பதால் தமிழ்ப் புலவர்களாலும் முருகன் அடியார்களாலும் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. இதனாலேயே "கந்தபுராணத்தில் இல்லாதது வேறு எந்தப் புராணத்திலும் இல்லை" எனச் சிறப்பிக்கப்படுகின்றது. சிவனின் முக்கண்களாகக் கூறப்படும் புராணங்களில் கந்தபுராணம் நெற்றிக்கண்ணாகும். அந்தவகையில் யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரமாக விளங்கும் வகையில் நல்லபல வாழ்வியல் நெறிகளை அறக்கருத்துக்கள் பொதிந்துள்ள புராணமாக விளங்கும் கந்தபுராணத்தில் காணப்படும் அறம் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையிலே நோக்கலாம்.

அறம் - விளக்கம்

''அறு'' எனும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே ''அறம்'' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச்செல்இ வழியை உண்டாக்குஇ உருவாக்குஇ துண்டிஇ வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில்இ மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே – முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்.[02]

''அறம் என்பதன் பொருளாவது கடமைஇ தானம்இ கற்புஇ இல்லறம்இ துறவறம்இ புண்ணியச்செயல்இ அறக்கடவுள்இ அறக்காடு எனப்பல பொருளில் வழங்கும்'' எனத் தமிழகராதி ஒன்று கூறுகிறது.[03] மேலும்இ அன்புஇ அருள்இ ஆசாரம்இ வாய்மைஇ நன்றிமறவாமைஇ ஒழுக்கம் என்பனவும் அறவியற் பண்புகளாகச் சுட்டப்படுகின்றமை ஈண்டு நோக்கற்பாலது. ''பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்'' என்ற ஆன்மீக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு. மனித நடத்தை குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் வழக்கமாகக் கொள்ளும் முடிவையே ஒழுக்கமாகக் கொண்டனர். இதனால் தனிமனித நடத்தை பெரும்பாலோரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கமென்னும் பண்பாக மலர்ந்து வாழ்க்கை நெறியாக மாண்புற்றது.

நூற்பயன்

தமிழிலே கந்தபுராணத்தை அருளிய கச்சியப்பர் நூற்பயனை எடுத்துக் காட்டிய இடத்தில் ''ஓதுவாரும் கேட்போரும் இப்பிறவியில் நல்வாழ்வைப் பெற்றுப் பின்னர் சிவலோகத்தை அடைவர்'' என்றும் ''அரக்கர்களுடைய வலிமையை முருகப்பெருமான் எவ்வாறு கெடுத்தருளினாரோ அதே போன்று கந்தபுராணத்தைக் கேட்போரது தீயசக்திகளும் மாய்ந்து அழிந்து விடும்'' என்றும் காட்டுகிறார்.[04] முருகப்பெருமான் கொடுமையை அழித்தவரே அன்றிக் கொடியவர்களை அழித்தவரல்லர். கொடியவர்களை அடியவர்களாக மாற்றிவிட்டார். இதனையே சூரசங்காரம் காட்டுகிறது. இதன்மூலம் எவ்வளவு பெரிய எதிரிகளாக இருந்தாலும் அவர்களைத் திருத்தி நண்பர்களாக்கிக் கொள்ளல் சிறந்த பண்பெனப் புலப்படுத்தப்படுகிறது.

மெய்ம்மையே உயரறப்பண்பு

நிலையற்றவற்றை நிலையென்று உணரும் மயக்கம் ஆன்மாக்களுக்கு உண்டு. உலகப்பொருட்கள் எல்லாம் அழியும் எனத் தெரிந்தும் அவற்றை நம்புகிறோம். இவ்வுடம்பையுமேஇ ''மெய்யென்று பேசும் பாழ் பொய்யுடல்''[05] என்கிறார் தாயுமானவர். மெய்ப்பொருள் உண்டு. அது இறைவன். திசைமாறிச் செல்பவன் குறித்த இலக்கை அடைய மாட்டான். பொய்யை மெய்யாகக் காண்பவர்களை அப்பர்இ ''மங்குவார்'' என்கிறார்.

கந்தபுராணத்திலே பொய்ம்மைக்கும் மெய்ம்மைக்கும் இடையில் நடைபெற்ற போர் குறிப்பிடத்தக்கது. மெய்யைச் சார்ந்து நின்ற தேவர்களுக்கு மற்றொரு பொய்ம்மையினால் இடுக்கண் விளைந்தது. ஆனால்இ தேவர்கள் மனமாறி பொய்ம்மையைச் சார்ந்த போது அந்த மெய்ப்பொருளாகிய பெருமானே வெற்றியை ஈட்டிக்கொடுத்தான். இதனூடாக மெய்ம்மையே உயரறப் பண்பு என்பது புலப்படுத்தப்படுகிறது.

தம் குற்றம் களைதல்

நாம் செய்த தீவினைகள் நீங்கும் போது தான் பிறரால் நமக்கு ஏற்படும் தீவினைகளும் நீங்கும். விருப்பு வெறுப்பற்ற இறைவன் ஒவ்வொருவரது வினைக்கேற்றபடியே இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்கிறான். ''அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்''[06] என்கிறது கந்தபுராணம். பிறர் குற்றம் காணுமளவிற்கு நமது குற்றத்தையும் காணத் தெரிய வேண்டும். ''குற்றங் களைந்து குணங்காண்போர் மேலோர்''.[07] குணங்காணும் நிலையில் வருவோமாயின் சமுதாயத்தில் அமைதி நிலவும். இவ்வொழுக்கப்பண்பினைக்

கந்தபுராணத்திலேஇ பிரமன் தன் குற்றம் காணுமளவிற்கு வந்து இறையருள் பெற்ற தன்மையிலிருந்து அறிய முடிகிறது.

தருமம்

உண்மையைப் போலவும்இ அதிலும் மேலானதாகவும் தருமம் போற்றப்பட்டு வந்துள்ளது. இதன் முக்கியத்துவம் பற்றி மகாபாரதம்இ 'ஒருவனுக்கு ஒரேயொரு நண்பனாகத்' தருமம் மரணத்தின் போதும் அதன் பின்னரும் அவனைத் தொடரும் என்கிறது.[08] "தருமம் என்றொரு பொருளுளது……"[09] என்பதில் தருமம் என்று ஒரு பண்டமாகக் கொள்ளப்படுகிறது. ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் பரிசுத்தமான இன்பம் கிடைக்க வேண்டுமானால்இ அது அந்த தருமத்தினாலேயே தான் உண்டாகும். அந்தத் தருமம் என்ற பண்டம் பெறுதற்கரியது. இம்மையிலே செய்யும் தவ விரதங்களினாலே ஒரு அளவிற்குப் பெறுதற்குரியது. மனம் மாசு நீங்கிஇ அறிவும் மனசும் ஒரு நிலைப்பட்ட தூய்மையாளர்களாலன்றி மற்றவர்களால் தருமம் என்ற பண்டத்தைச் சிந்திக்கவும் முடியாது.

காசிப மகா முனிவர் தம் புதல்வர்களான சூரன்இ சிங்கன்இ தாரகன் மூவரையும் நோக்கி முதலில் உபதேசித்த பாடம் "தருமம் என்றொரு பொருள் உளது" என்பதாகும். உலக அன்னையாகிய ஔவை "அறம் செய விரும்பு" என்று அறத்திலே இந்த உலகத்துக்கு ஆசை உண்டானாலோ என்று ஆவல் உறுகிறாள். அறம் என்ற நீண்ட ரேகையின் தொடக்கப் புள்ளியே தருமம். "ஈறில் நல்லறம்" எனக் கம்பரும்இ "நால்வருக்கு அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தோன் காணேடீ" என மாணிக்கவாசகரும்இ "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல்" எனத் திருவள்ளுவரும் அறம் பற்றி உரைக்கின்றனர்.[10]

அறம் வெகு நீளமானது. அதனால் காசிபர் தம் பிள்ளைகளுக்கு "அறம் செய விரும்பு" கூடிப்போய்விட்டதென்று "தருமம் என்றொரு பொருள் உளது" என்று தொடங்கஇ அதுவும் உதவாதென்றாள் சகதர்மிணி. காசிபர் பெருமூச்சு விட்டார். அரசகுருவான சுக்கிராச்சாரியருடைய கலாசாலைக்குப் பிள்ளைகளை அள்ளிக் கொண்டு போனாள் மாயை. சுக்கிரன் நல்ல வெள்ளை. எந்தக் கருப்பர்களையும் வெள்ளையராக்கவல்லது அவர் கலாசாலை. சுக்கிரன் உபதேசம் செய்யத் தொடங்கினான். "தருமம் செய்க தவறுள பாவமாம்இ கருமம் செய்யற்க என்பர் கத்திலார்"இ "புண்ணியமாம் பாவம்போம்" என்பதெல்லாம் பேய்க்கதை என்று உபதேசம் செய்யப்பட்டது. தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பதற்கிணங்கஇ தாயின் வழிகாட்டலில் வெள்ளியின் பள்ளியில்இ கருப்பர்களானாலும் சிந்தையில் வெள்ளையர்களானார்கள் (வெறுமையானார்கள்). தர்மத்தை விலக்கினார்கள். இதனால் முருகப்பெருமானால் நேர்ப்படுத்தப்பட்டார்கள். எவன் சீவனம் தருமத்தில் ஆரம்பிக்கிறதோஇ அவன்தான் மனிதரில்இ "வையத்தானே ஆனாலும் வானுறையும் தெய்வம்" என்று அறத்தின் அடிப்படையாக விளங்கும் தருமத்தின் முக்கியத்துவம் எடுத்தாளப்பட்டுள்ளது.[11]

ஒழுக்கம் தவறின் தண்டனை நிச்சயம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"[12]

என வள்ளுவர் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகாப் பேசுகிறார். பிரணவப் பொருளை உணர்ந்திராத படைத்தற் கடவுள் பிரம்மாவிற்கு சிறையைத் தண்டனையாகக் கொடுத்து மெய்ம்மையை உணர்த்தியவர் முருகப்பெருமான் என்பதைக் கந்தபுராணம் சுட்டித்து நிற்கிறது. சிறை விடுவிக்கப்பட்ட பிரம்மா மெய்யை உணருகிறான். நாதனைப் பார்த்துஇ "ஐயனே! உன்தன் புதல்வன் தந்த தண்டனை குற்றமன்று. அதுவே என்னைப் புனிதனாக்கி மெய்யுணர்வை நல்கியது. நான் எனும் அகந்தையை அழித்துஇ தீது செய்வினைகளை மாற்றியது" எனக் கூறி வணங்கி நின்றான். இதனைக் கந்தபுராணம்இ "நாதனித் தன்மை கூறி நல்லருள் புரிதலோடும்"[13] என்ற செய்யுளால் உணர்த்துகிறது.

உயர்வற உயர்நலம் கொடுக்கின்றவனுக்கே தண்டனை வழங்கும் உரிமையுண்டு. ஆகவேஇ இதிலிருந்து சித்திரிக்கப்படும் ஒழுக்கக் கருத்தாவதுஇ நான் என்ற அகந்தையில் சிறுவர்களை இகழ்தல் என்பது ஒழுக்கத்திற்குப் புறம்பாகும். ஒழுக்கம் தவறின் தண்டனை நிச்சயம் என்பதாகும். ''பெரியோரை இகழ்தல் இலமே. சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'' என்ற சங்கப்பாடல் இக்கருத்திற்கு வலுச்சேர்க்கிறது.

ஆசை அறுதல்

ஆசைகள் பெருகப் பெருக அமைதியின்மையும் பெருகுகிறது. பிறர் பொருட்டு ஆசைப்பட்டால் அது பிறவியைப் பெருக்கும். தாயுமானவரும் ஆசைப்படுகிறார். ''கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என்னிச்சை பராபரமே''.[14] தம் பொருட்டு ஞானிகள் ஆசைப்படுவதில்லை. இராவணன் ஆசைப்பட்டு அழிந்தான். துரியோதனன் ஆசைப்பட்டுத் துணைவரோடு அழிந்தான். சூரன் ஆசைப்பட்டுக் கிளை முதலோடு தொலைந்தான். எனவே ஆசை அற வேண்டும். இதற்கு இறைவனை நினைக்க வேண்டும் என்ற சீரிய கருத்துக்களைக் கந்தபுராணம் எடுத்து விளக்குகிறது. ''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை யில'' எனத் திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார்.

நன்றி மறவாமை

''ஒன்றொரு பயந்தனை உதவினோர் மனங்............அவர்க்கு முன் புரிந்த நன்றியே கொன்றிடும்''[15] எனும் பாடலின் மூலமாக சூரனின் மகன் இரணியன் நன்றி மறவாமை பற்றிய அறவுரைகளைக் கூறுகிறான். அதாவதுஇ ஒப்பற்ற ஒரு உதவியைப் புரிந்தோருடைய மனம் வருந்துமாறு ஒரு தீமையைப் புத்தி பூர்வமாகச் செய்வாராயின் அத்தீமையாளரை முன் புரிந்த நன்றியே அழித்து விடும். அவரை அழிக்கக் கூற்றுவன் வேண்டுவதில்லை என்கிறார்.

''நன்றி மறப்பது நன்றன்று'' என்பர் வள்ளுவர். இறைவன் தந்த செல்வங்களை வைத்துக் கொண்டு இறைவன் செய்த நன்றியை மறப்பது தீது. துரியோதனன் மண்ணாசையாற் கெட்டான். இராவணன் பெண்ணாசையாற் கெட்டான். கம்சன் பல தீவினைகளால் கெட்டான். ஆனால் சூரன்...... நன்றி மறந்தமையாற் கெட்டான். பாவங்களுக்கெல்லாம் மிகப்பெரிய பாவம் நன்றி மறப்பது ஆகும். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்பது வள்ளுவரறம்.

சூரபன்மனுக்குச் சிவபெருமான் எண்ணிலாத வரங்களை நல்கினார். அவன் கேளாத வரங்களையும் வலிதில் வழங்கி வாழ்வித்தார். இந்த நன்றியை மறந்த மாபெரும் பாதகன் சூரனை அழித்தது. வரமளித்த கங்கை வேணியன் மைந்தனோடு எதிர்த்து அமராடியது நன்றி மறந்த செயலாகும். வீரவாகு தேவர் தூது வந்துஇ ''பூத மைந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்......''[16] என இடித்துரை கூறி நன்றி மறந்த பெருந்தீங்கைத் தெளிவுறுத்துகிறார். ஆகவேஇ கந்தபுராணப் பகுதியூடாக நன்றிமறவாமை எனும் அறப்போதனை உலகத்தாருக்கு உரைக்கப்படுவதனைக் காணலாம்.

சிங்கமுகாசூரன் நீதி வழுவாதவனாயும் அநீதிக்குத் துணை போகாதவனாயும் முருகனின் அருட்திறத்தை உணர்ந்தவனாயும் சித்திரிக்கப்படும் அதேவேளைஇ முருகனுடன் போரிட்டு குலிசாயுதத்தால் இறைநீக்கம் பெறுகிறான். இதிலிருந்து புலப்படும் செய்தியாவதுஇ சூரனாகிய தனது தமையனிடமிருந்து தான் வளர்ந்ததனையும் செஞ்சோற்றுக்கடனுக்காக வேறு வழியில்லாது அநீதிக்குத் துணைபோனமையும் எடுத்துக் காட்டப்படுகிறது. மகாபாரதத்திலே கர்னன் செஞ்சோற்றுக்கடனுக்காகத் துரியோதனனுக்குச் சார்பாகப் போரிட்டமை அவனது அறநெறியாகும். இதனையே சிங்கமுகாசுர வதைப்படலம் எடுத்தியம்புகிறது.

நிறைவுரை

இந்துக்களின் ஆன்மீக வாழ்வியலைப் பொறுத்தவரை அறம்இ சமய வாழ்வினைத் தூய்மைப் படுத்துவதற்குப் பக்கபலமாக அமைகிறது. இந்துக்கள் இந்துக்களாக வாழ்வதற்கும் ஆன்மீக ஈடேற்றம் பெறுவதற்கும் விதித்த வழிவகைகளே அறநெறிகள் என்பதை கந்தபுராணத்தின் வழி அறிய முடிகிறது. மெய்ம்மையே உயரறப் பண்புஇ தம் குற்றம் களைதல்இ தருமம்இ ஒழுக்கம் தவறின் தண்டனை நிச்சயம்இ ஆசை அறுதல்இ நன்றி மறவாமை போன்ற நல்ல பல கருத்துக்களை எடுத்துக்காட்டுவதிலிருந்து கந்தபுராணம்இ இந்துக்களின் வாழ்வியலில் மிக முக்கியமானதொரு இடத்தினை வகித்திருக்கிறது என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன்இநா.இ (2002)இ கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்இ கலைஞன் பதிப்பகம்இ சென்னைஇ ப:14.
2. அரங்கசாமிஇகா.இ அறவியலும் பண்பாடும்இ ப:01
3. கலைவாணி.இரா.இ (1998)இ இந்துநாகரிகத்தில் அறவியல்இ இந்துநாகரிகத்துறைஇ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்இ ப:16.
4. தங்கம்மா அப்பாக்குட்டிஇ (2000)இ கந்தபுராணச் சொற்பொழிவுகள்இ பிறந்தநாள் அறநிதியம்இ துர்க்காதேவி தேவஸ்தானம்இ தெல்லிப்பழை பக்: 02இ 03.
5. மேலதுஇ ப:03.
6. மேலதுஇ ப:06.
7. மேலதுஇ ப:06.
8. சிவகாமிஇவி.இ (2011)இ ‘‘அறம் - தமிழிலும் வட மொழியிலும்’’இ அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும்இ இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்இ ப:364.
9. கணபதிப்பிள்ளைஇசி.இ (1960)இ கந்தபுராணப் போதனைஇ அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகா சபையினர்இ ப:08.
10. மகாலிங்கம்இசிவ.இ (1959)இ கந்தபுராணப் பெருமைஇ ஸ்ரீ சண்முகநாத அச்சகம்இ யாழ்ப்பாணம்இ ப:02.
11. மேலதுஇ ப:04.
12. வரதராசன்இமு.இ (2019)இ திருக்குறள்இ பண்பாட்டலுவல்கள் திணைக்களம்இ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுஇ வடமாகாணம்இ ப:136.
13. தங்கம்மா அப்பாக்குட்டிஇ (2000)இ கந்தபுராணச் சொற்பொழிவுகள்இ பிறந்தநாள் அறநிதியம்இ துர்க்காதேவி தேவஸ்தானம்இ தெல்லிப்பழைஇ பக்:28இ29
14. மேலதுஇ ப:30.
15. மேலதுஇ ப:71
16. மேலதுஇ ப:72.
17.

**உசாத்துணை நூல்கள்**


1. தங்கம்மா அப்பாக்குட்டிஇ (2000)இ கந்தபுராணச் சொற்பொழிவுகள்இ பிறந்தநாள் அறநிதியம்இ துர்க்காதேவி தேவஸ்தானம்இ தெல்லிப்பழை.
2. சுப்பிரமணியன்இநா.இ (2002)இ கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்இ கலைஞன் பதிப்பகம்இ சென்னை.
3. றுடைடயைஅ டுடைடநைஇ (1948)இ யுP ஐவெசழனரஉவழைந வழ நுவாைஉளஇ ஆநவாரநெ யனெ ஊழஇ டுவுனுஇ டுழனெழெ.
4. சிவலிங்கம்இசெ.இ (2011)இ கந்தபுராணச் சுருக்கம்இ சேமமடு பதிப்பகம்.

5. கலைவாணிஇஇரா.இ (1998)இ இந்துநாகரிகத்தில் அறவியல்இ இந்துநாகரிகத்துறைஇ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
6. பத்மநாதன்இசி.இ (1996)இ இந்துக் கலைக்களஞ்சியம் பகுதி 03இ இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்இ கொழும்பு.
7. மகாலிங்கம்இசிவ.இ (2016)இ சமய வாழ்வியல்இ சிவஜோதி பொற்பதி வீதிஇ கோண்டாவில்இ யாழ்ப்பாணம்.
8. கணபதிப்பிள்ளைஇசி.இ (1960)இ கந்தபுராணப் போதனைஇ அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகா சபையினர்.
9. மகாலிங்கம்இசிவ.இ (1959)இ கந்தபுராணப் பெருமைஇ ஸ்ரீ சண்முகநாத அச்சகம்இ யாழ்ப்பாணம்.
10. பத்மநாதன்இசி.இ இரகுபரன்இக.இ பிரசாந்தன்இஸ்ரீ.இ (2011)இ அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும்இ இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்இ கொழும்பு.